


# ஸத் ஸம்ப்ரதாயம்

रामं पुराणपुरुषं रमणीयमेषं राजाधिराजमुकुटार्चितपादपीठम् ।
सीतापतिं सुनयनं जगदेकवीरं श्रीरामचन्द्रमनिशं कलयामि चित्ते ।
ராமம்' புராணபுருஷம்' ரமணீயமேஷம்' ராஜாதி4ராஜமுகுடார்சிதபாத3பீட2ம் |
ஸீதாபதிம்' ஸூநயனம்' ஜக3தே3கவீரம்' ஶ்ரீராமசந்த்3ரமநிஶம்' கலயாமி சித்தே ||

ராமன் காலத்திற்கப்பாற்பட்ட மாமனிதர், அழகிய வேஷம் கொண்டவர், பேரரசர்களால் பாதபீடத்தில் கிரீடம் படிய வணங்கப் பெற்றவர், ஸீதையின் பதி, கண்ணழகர், உலகின் தனித்த வீரர், அந்த ராமசந்திரனை உள்ளத்தில் கொள்கிறேன்.



## அருள் மொழிகள்

மனிதன் செய்யும் காரியங்களை பஞ்சமஹாபூதங்களான பிருத்வீ, தேஜஸ், ஜலம், வாயு, ஆகாசம், சூரிய சந்திரர்கள், ஸந்தியா காலம், மனதினுள்ளிருக்கும் அந்தர்யாமியான பரமாத்மா – இவ்வளவு பேர் பார்த்துக் கொண்டிருக்கும்போது யாரும் பார்க்கவில்லை என்று சொல்வது முறையா? இத்தகைய பேச்சு நமக்கு வருவதற்கு நம்மிடமுள்ள அஹங்காரம்தான் காரணம். அஹங்காரம்தான் தவறுகள் பல நடப்பதற்கும் காரணம். ஆகவே அஹங்காரம் இருக்கக் கூடாது.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

क्षीरेण आत्मगत उदकाय हि गुणा दत्ताः पुरा ते अखिलाः क्षीर उत्तापं अवेक्ष्य तेन पयसा स्वात्मा कृशानो हुतः ।
गन्तुं पावकं उन्मनः तत् अभिदृष्ट्वा तु मित्र आपदं युक्तं तेन जलेन शाम्यति, सतां मैत्री पुनः तादृशी ।।

க்ஷீரேண ஆத்மக3த உத3காய ஹி கு3ணா த3த்தா: புரா தே அகி2லா:
க்ஷீர உத்தாபம்' அவேக்ஷ்ய தேன பயஸா ஸ்வாத்மா க்ரு'ஶானோ ஹுத: .
க3ந்தும்' பாவகம்' உன்மன: தத் அபி4த்3ரு'ஷ்ட்வா து மித்ர ஆபத3ம்'
யுக்தம்' தேன ஜலேன ஶாம்யதி, ஸதாம்' மைத்ரீ புன: தாத்3ரு'ஶீ..

தன்னுடன் கலந்துவிட்ட நீருக்கு, பால் தனது எல்லா நல்ல குணங்களையும் முன்னமேயே அளித்துவிடுகிறது. பால் அக்னி வெப்பத்தால் பொங்கி எழுந்து அக்னியில் வழியும் போது, அதில் கலந்த நீரும் மனம் கலங்கி கூடவே எழும்பி நெருப்பில் விழுகிறது. இவ்வாறு இணைபிரியா நண்பனுக்கு ஏற்பட்ட ஆபத்தைக் கண்டு பொங்கும் பாலில் ஜலம் தெளிக்கப்பட்டு அது பாலின் தாபத்தைக் குறைக்கவும் செய்கிறது. சான்றோர்களின் நட்பும் இவ்வாறானதே.
(பரோபகார பத்ததி: (பரோபகார இயல்பு)



# விதுர நீதி

द्वे कर्मणी नरः कुर्वन्नस्मिन्लो के विरोचते ।
अनुवन् परुषं किंचित् अनतोऽनर्चयस्तथा ॥
த்³வே கர்மணீ நர: குர்வன்னஸ்மின்லோ கே விரோசதே |
அனுவன் பருஷம்' கிஞ்சித் அனதோ(அ)னர்சயஸ்ததா² ||

கடூரமான சொல்லைக் சொல்லாமலும் துஷ்டர்களை பூஜிக்காமலும் இருப்பது என்ற இவ்விரண்டு காரியங்களைச் செய்கிறவன் நன்கு பிரகாசிக்கிறான்.



द्वाविमौ पुरुषव्याघ्र परप्रत्ययकारिणौ ।
स्त्रियः कामितकामिन्यः लोकः पूजितपूजितः ॥
த்³வாவிமௌ புருஷவ்யாக்⁴ர பரப்ரத்யயகாரிணௌ
.
ஸ்த்ரிய: காமிதகாமின்ய: லோக: பூஜிதபூஜித: ..

ஓ புருஷச்ரேஷ்டனே ! ஸ்திரீகள் பிறர் ஆசை கொண்ட வஸ்துவில் ஆசைப்படுவார்கள். ஸாமான்ய ஜனங்கள் பிறரால் கொண்டாடப்பட்டவர்களை தானும் கொண்டாடி பூஜிப்பார்கள். இவ்இரண்டு பேர்கள் பிறர் செய்வதைப் பார்த்து தானும் செய்வாதை இயல்பாய் கொண்டவர்கள்.

द्वाविमौ कण्टको तीक्ष्णौ शरीर परिशोषिणौ ।
यश्चाधनः कामयते यश्च कुध्यत्यनीश्वरः ॥
த்³வாவிமௌ கண்டகோ தீக்ஷ்ணௌ ஶரீர பரிஶோஷிணௌ |
யஶ்சாத⁴ன: காமயதே யஶ்ச குத்⁴யத்யனீஶ்வர: ||

பொருளற்றவன் தான் போகங்களை அனுபவிப்பதற்காக பல வஸ்துக்களை வாங்க விரும்புவதும் சக்தியற்றவன் கோபித்துக் கொள்வதும் இவ்விரண்டும் கூர்மையான முள் குத்தி துயரத்தை அளிப்பது போல் சரீரத்தை தபிக்கச் செய்துவிடும்.

द्वावेव न विराजेते विपरीतेन कर्मणा ।
गृहस्थश्च निरारम्भः कार्यवांश्चैव भिक्षुकः ॥
த்³வாவேவ ந விராஜேதே விபரீதேன கர்மணா |
க்³ரு'ஹஸ்த²ஶ்ச நிராரம்ப⁴: கார்யவாம்'ஶ்சைவ பி⁴க்ஷுக: ||

சக்தியில்லாதவர்களுக்கு பொறுமை குணமாகிறது. சக்தியுள்ளவர்களுக்கு பொறுமை அலங்காரமாகிறது. பொறுமையால் உலகத்தை வசப்படுத்தலாம். பொறுமையால் எதைத்தான் ஒருவனால் சாதிக்க முடியாது.

(தொடரும்.....)




# ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## நமது குருநாதர்

நம் குருநாதர் ஞானிகளுள் தலைசிறந்தவர். ஆதிசங்கரரைப் போலவே நம் ஆசார்யரும் சிறுவயதிலேயே ஸந்யாசம் மேற்கொண்டதனால், 3வது புருஷார்த்தமான "காமம்" என்பதை அறவே அறியாதவராயும் 4வது புருஷார்த்தமான "மோக்ஷ"மொன்றையே அறிந்தவராயுமிருந்தார்.



தம்மை நாடி வருபவர்களிடம், "சாரமற்ற பேச்சுக்கள் பேசி காலத்தை விரயமாக்காதீர்கள்" என்று வலியுறுத்துவார். ஆனால், உபயோகமான பேச்சுக்களை விரும்புவார். அவருடைய ஆழ்ந்த அறிவும் உபநிஷத் உபதேசங்களை எப்போதும் மனதில் சிந்தனை செய்து கொண்டிருந்ததும்தான் அவர் சாரமற்ற பேச்சுக்களை விரும்பாததற்குக் காரணங்களாகும். "அதிகம் பேசினால் உன் தொண்டைதான் வறண்டு போகும்" என்னும் உபநிஷத் வாக்கியத்திற்கேற்ப, அதிகம் பேசுவதைவிட பேசாதிருத்தலே நல்லது; அதனால் தொண்டையும் ஓய்வுபெறும். நம் ஆசார்யர் இவ்வாறே இருந்தார்.

(ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராச்சாரியார் மஹாஸன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

அவருக்கு ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் நூல்களிலும் அன்னார் விளக்கியிருக்கும் தத்வோபதேசங்களிலும் மிகுந்த ஈடுபாடிருந்தது. நடமாடிக் கொண்டிருக்கும் போதுகூட ஸ்ரீமத் பகவத்பாதரின் உபதேசங்களை ஸ்மரித்துக் கொண்டிருக்கும்படி எனக்கு எப்போதும் உபதேசிப்பார். "ஸ்ரீ சாரதையின் ஆலயத்துக்குச் செல்வதும். தேவியை வணங்குவதும் வெளிக்காரியங்கள் ஆகும். உள்காரியங்கள் யாதெனில் ஸ்ரீ பகவத்பாதரின் உபதேசங்களை எப்போதும் மனத்துள் சிந்தித்துக் கொண்டிருப்பதேயாகும். இதுவே நம் வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்யும். இல்லையெனில் நாம் வாழ்வில் எப்படித்தான் கடைத்தேற முடியும்?" என்று அவர் கூறுவார். ஸ்ரீ பகவத்பாதரின் உபதேசங்களையும் உபநிஷத்துக்களின் உபதேசங்களையும் எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பதே நம் ஆசார்யரின் மேம்பட்ட குணம்.



காளிதாஸனின் இரகுவம்சத்தில் திலீப மஹாராஜனின் குணங்களை வர்ணிக்கும் ஒரு சுலோகத்தின் அடிப்படையில்தான் நம் வாழ்க்கையின் குறிக்கோள் அமையவேண்டும் என்று நம் ஆசார்யர் கூறுவார். இந்த சுலோகம், "ஏற்றுக்கொள்ளத் தகுந்தவர் யார்?" என்பதை விளக்குகிறது. சாதாரணமாக ஒருவனுக்கு உறவு முறையோ அல்லது நட்போதான் மற்றவனை ஏற்கக் காரணமாகிறது. ஆனால், திலீப மஹாராஜனோ அப்படியில்லை. அவர் மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது யோக்யதாம்சம் மட்டுமே. "மற்றவன் என்னை மதிக்கிறானா இல்லையா என்பது முக்கியமல்ல. அவனுக்கு நல்ல யோக்யதை இருந்தால் அவன் எனக்கு வேண்டியவனே. என்னிடம் அவன் பாராமுகமாய் இருந்தாலும், அவனிடம் யோக்யதை இருப்பதால் எனக்கு அவன் வேண்டியவனே" என்கிற ஒரு மனோ பாவத்துடன் வாழ்ந்து வந்தார் திலீப் இராஜா. காளிதாஸன் இதற்கு ஓர் உவமை கூறுகிறார். "மருந்து கசந்தாலும் அது வியாதியஸ்தனுக்கு அவசியமாகிறது. அதன் குணப்படுத்தும் தன்மையே முக்கியமன்றி, ருசியல்ல." சர்ப்பத்தால் தீண்டப்பட்ட விரல், நம் உடலின் பாகமே ஆனாலும், வெட்டி எறியப்படவேண்டியதே. உயிர் பிழைக்க வேண்டுமானால் நம் உடலைச் சேர்ந்த உறுப்பாயிற்றே என்ற அபிமானத்தை நாம் அதனிடம் வைக்கக்கூடாது. மற்றவர்களை ஒட்டிக்கொள்ளுவதோ, விலக்குவதோ இதேபோலத்தான். திலீப மஹாராஜனின் இச்சீரிய குணம் நம் ஆசார்யருக்கு மிகவும் பிடித்திருந்தது. யோக்யதையுள்ளவன் தள்ளியிருந்தாலும் நம் ஆசார்யர் அவனை விரும்புவார். யோக்யதையற்றவன் மிக அருகிலேயே இருந்தாலும் அவனை சட்டை பண்ணமாட்டார். அம்மனிதன் இருக்கும் திசையில்கூட பார்வையை செலுத்தமாட்டார்; திலீப மஹாராஜன் போலவே நம் ஆசார்யரிடம் காம்பீர்யம், நுண்ணறிவாற்றல், தைரியம், நிதானம் முதலிய ஒப்பற்ற குணங்கள் யாவும் நிரம்பிக்கிடந்தன. ஒவ்வொருவர்பாலும் அபார கருணையுள்ளம் கொண்டவராக இருந்தார். "பரோபகாரத்திற்காகவே வாழ்க்கை" என்ற தீர்மானம் கொண்டிருந்தார்.

ஒருவன் தீங்கு செய்தால் அதை மனதில் கொண்டு தக்க சமயம் வரும்பொழுது அவனை பழிவாங்கும் எண்ணமே சாதாரண மனிதனின் இயல்பாகும். நம் ஆசார்யரோ தவறு செய்தவனுக்கு கூட கருணை காட்டும் இயல்புடையவர். தீங்கு செய்தவனை தண்டிக்கும் சுபாவமே இருக்கக் கூடாது என்று எப்போதும் போதிப்பார். "பிழை செய்பவன் இராஜஸ குணமுடையவன். நாம் ஸந்யாசிகள், எந்நிலையிலும் ஸத்வ குணத்தையே மேற்கொள்ள வேண்டும்" என்பார்.

(தொடரும்....)



## சங்கல்ப ஸூக்தம்

(சுக்லயஜீர்வேதத்தில் வாஜஸனேயி ஸம்ஹிதை 34.1-6)

விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்

1. ஒளிப்பொருளான எந்த ஆன்மா விழிப்பு நிலையில் வெளியில் செல்கிறதோ, அதுவே தூக்கத்தில் அப்படியே அகமுகமாகச் செல்கிறது. தொலைதூரங்களை எட்டுவதும், ஒளிக்கெல்லாம் ஒளியாக இருப்பதும், ஒன்றேயானதுமான அந்த ஆன்மா, எனது மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யுமாறு அவசியம் தூண்டட்டும்!

2. அறிஞர்கள் வேள்விகளில் அபஸ் போன்ற கர்மங்களை எதனால் செய்கிறார்களோ, அறிவாளிகளின் பிரார்த்தனைகளில் எது முதன்மையானதோ, எது போற்றத்தக்கதோ, எது உயிர்களின் உள்ளே உறைகிறதோ அந்த ஆன்மா எனது மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யுமாறு என்றும் தூண்டட்டும்!

3. எந்த ஆன்மா தன்னறிவு, ஞாபக சக்தி, மற்றும் மன உறுதி ஆகிய வற்றின் பிறப்பிடமோ, எந்த ஆன்மா உயிர்களில் உள்ளே அழிவற்ற ஒளியாக உள்ளதோ, எது இல்லாமல் எந்த வேலையும் செய்ய முடியாதோ அந்த ஆன்மா, எனது மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யுமாறு சதா சர்வ காலமும் என்னை தூண்டட்டும்!

4. கழிந்தது, இருப்பது, வரப்போவது எல்லாம் எந்த அழிவற்ற ஆன்மாவால் அறியப்படுகின்றனவோ, வேள்வி செய்கின்ற எழுவரும் எதனால் வேள்விபற்றி விரித்துரைக்கிறார்களோ அந்த ஆன்மா, எனது மனம் நல்ல சங்கல்பத்தை எப்பொழுதும் செய்யுமாறு தூண்டட்டும்!

5. ஆரங்கள் தேர்ச் சக்கரத்தின் அச்சில் நிலைபெற்றிருப்பது போல் ரிக் சாம யஜுர் வேதங்கள் எதில் நிலைபெற்றுள்ளனவோ, அப்படி மக்களின் மனம் எல்லாம் எதில் ஊடும்பாவும்போல் நிலைபெற்றுள்ளதோ அதே போல் அந்த ஆன்மாவானது, எனது மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யுமாறு எல்லா நேரமும் என்னை தூண்டட்டும்!

6. நல்ல சாரதி குதிரைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது போல், மனிதர்கள் கடிவாளத்தால் குதிரைகளை வழி நடத்துவதுபோல் எந்த ஆன்மா இதயத்தில் நிலைபெற்றிருந்து மனிதர்களை வழி நடத்துகிறதோ, எந்த ஆன்மா என்றும் இளமையானதோ அனைத்திலும் வேகமானதோ அந்த ஆன்மா, எனது மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யுமாறு தூண்டட்டும்!

(சங்கல்ப ஸூக்தம் முற்றும்)



## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

# 1. பகுத்தறிவு (விவேகம்)

விவேகம் -சாஸ்திரத்தில் சிரத்தை

"சிறுவன் : கடவுள் இருக்கிறார் என்று நீ எப்படித் தெரிந்து கொள்வாய்? நீ கடவுளைக் கண்டிருக்கிறாயா? அல்லது, கடவுளைக் கண்டவர்களையாவது நீ பார்த்திருக்கிறாயா?

ஸ்ரீனிவாஸன் : நீ கடவுள் இல்லை என்று சொல்ல முடியுமா? நீ பார்க்காவிடில் அது இல்லை என்று சொல்வதா? நீ பம்பாயைப் பார்த்திருக்கிறாயா? இல்லையே! அப்படியானால் பம்பாய் இல்லை என்று ஆகிவிடுமா?

சிறுவன் : நான் பம்பாயைப் பார்த்ததில்லை. ஆனால் பம்பாயைப் பார்த்த பலரை நான் பார்த்திருக்கிறேன். அதனால் பம்பாய் உண்டு என்று நம்புகிறேன்.

ஸ்ரீனிவாஸன் : ரொம்ப சரி. அப்படியே தான் இங்கும். நம் முன்னோர்கள், ரிஷிகள் ஆகியவர்கள் கடவுளைக் கண்டிருக்கிறார்கள். அதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை உறுதியாகக் கொண்டு நாம் நம்புவதில் என்ன ஆக்ஷேபணை இருக்கிறது? அதைத் தள்ள முடியாதே, ஆகையால் கடவுள் உண்டு என்று தான் சொல்ல வேண்டும். ...”

இவ்வாறாகச் சிறு வயதிலேயே "இது சரி, அது தவறு' என்பதை நிச்சயிப்பதில் ஸ்ரீனிவாஸருக்கு சாஸ்திரத்தின் விஷயத்தில் பிரமாண புத்தி இருந்தது என்று அறிகிறோம். பின்னாளில், இவர் ஆசார்யர் ஆன பின்பு. இதைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்:

“...ஒரு வழக்கறிஞர் இப்படி வாதிட்டாராம்: 'மாண்புமிகு நீதிபதி அவர்களே! என் கட்சிக்காரரை நிரபராதியாகவே பார்க்க வேண்டும். இவர் திருடியது என்னவோ உண்மை தான், ஆனால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இவருடைய குடும்பம் வறுமையில் வாடுகிறது. திருடின பணத்தை வைத்துக் கொண்டு அவர் தனக்கு மட்டும் அல்லாமல் தன் சுற்றத்தினருக்கும் உதவி புரிந்தார். மேலும் களவாடும் போது, எவருடைய உடமைகளையும் நாசம் செய்யவில்லை. சொல்லப் போனால், வேறு சாவியைக் கொண்டு பூட்டைத் திறந்ததால், பூட்டைக் கூட உடைக்கவில்லை. களவாடப்பட்டவர் சேர்த்து வைத்துள்ள கறுப்பு பணத்தில் இவர் திருடியது ஒரு சிறு பகுதியே. இவருடைய செயலால் கறுப்பு பணமும் வெளியில் வந்தது; இது என் கட்சிக்காரர் அரசாங்கத்துக்குச் செய்த சேவை என்று கருத வேண்டும். மேலும், களவாடப்-பட்டவர் பெருஞ்செல்வந்தர். என் கட்சிக்காரர் திருடியதோ கொஞ்சமே. இதனால், அப்பணக்காரரின் செல்வம் எவ்விதத்திலும் குறையாது.'





இந்த வாதத்திற்கு நீதிபதி எப்படி பதில் கூறியிருப்பார்? 'இந்நாட்டின் சட்டத்தை மீறும் வாதங்களை நான் கேட்க விரும்பவில்லை. இந்தியக் குற்றவியல் சட்டப்படி திருடுவது ஒரு குற்றம், உங்கள் கட்சிக்காரர் திருடியதை நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள். எனவே, அவரைத் தண்டிப்பது என் கடமை' என்றல்லவா கூறுவார்?

ஒரு செயல் குற்றமா இல்லையா என்பதை நிர்ணயிக்க நீதிபதிகள் குற்றவியல் சட்டத்தையே பிரமாணமாகக் கொள்கிறார்கள்; இந்தச் சட்டத்தை மீறும் முரண்புனைவான வாதங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதே போல், எது தர்மம், எது அதர்மம் என்பதைத் தீர்மானிக்க ஒருவன் வேதத்தையே பிரமாணமாகக் கொள்ள வேண்டும்; வேதத்திற்குப் புறம்பான வாதங்களை அல்ல ..”

விவேகத்தின் செயல்பாடு

இங்கே, ஆசார்யாள் உதாரணமாகக் காட்டுவதை நன்கு கவனிக்க வேண்டும். மனம் போன போக்கில் செயல்படக் கூடாது, “சரி”, 'தவறு' என்று தீர்மானிக்கும் அதிகாரம் சாஸ்திரத்திற்கு மட்டுமே உண்டு. மேலும், உலகத்திற்கு (புலன்களுக்கு) அப்பாற்பட்ட விஷயத்தில் வேதமே பிரமாணம் என்பதற்கு உலக விஷயத்தில் மனிதரால் இயற்றப்பட்ட சட்டம் பிரமாணமாக இருக்க வேண்டும் என்பதையே ஆசார்யாள் உதாரணமாகக் காட்டினார். எனவே, உலகத்து விஷயங்களில் சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் செய்யக் கூடாது என்பதை ஆசார்யாள் விவாதத்திற்கு அப்பாற்பட்டதாகவே கருதின அவர் தமது செயலிலும் காட்டினார். சிருங்கேரி சாரதா பீடாதிபதியாக இருந்த ஆசார்யாள். அப்பீடத்தின் மேன்மைக்காகப் பலவற்றை செய்தார். ஆனால், மடத்தின் அபிவிருத்திக்காகச் செய்யப்படும் எதுவும் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கக் கூடாது என்று தீவிரமாக நம்பினார். அப்படியே, செய்யத் தகாததைத் தவிர்த்தும் செய்யத்தக்கது மட்டுமே செய்தார் என்று மடத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி திரு.கிரிதர சாஸ்திரி கூறுகிறார்:

(தொடரும் ...) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் 1
### நல் வாழ்க்கை

இவ்விதமாக ஜகத்திலுள்ள ஸுகிகளிடம் மைத்ரீயும், துக்கிகளிடம் கருணையும், புண்ணியம் செய்கிறவர்களிடம் ஸந்தோஷமும், பாபம் செய்கிறவர்களிடம் உதாஸீன புத்தியும் இருந்தால் நம்மனஸைக் கலக்கக்கூடிய காரணங்கள் யாதொன்றும் இல்லாமல் போய்விடுகிறபடியால் கவலையற்று நம்முடைய சிரேயஸ்ஸை அடைய வேண்டியதற்குள்ள ஸாதனங்களை, மற்றவர்களால் எவ்வித இடைஞ்சலில்லாமல், நன்கு அனுஷ்டிப்பதற்கு ஸௌகர்யமேற்படும். உலகத்தில் யாருடனும் மனஸ்தாபத்திற்கு வழியில்லாததினால் நம் வாழ்க்கையும் ஸுகமாக நடக்கும்.



Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.
- Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

### அத்தியாயம் - 2
### பொறுமை

ஸ்ரீமத் பகவத்கீதை 16ஆவது அத்தியாயத்தில் தைவீக ஸம்பத்து எதுவெல்லாமென்று ஸ்ரீபகவான் எடுத்துச் சொல்லும்போது அக்ரோதம் என்பதையும் க்ஷமாவென்பதையும் தனித்தனியே சொல்லியிருக்கிறார். அக்ரோதம் என்றால் கோபமில்லாமை, க்ஷமா என்றால் பொறுமை, ஸாதாரணமாக இரண்டுமே ஒன்றுபோலத் தோன்றும். ஆனால் வித்தியாஸமுண்டு. கோபம் வந்து கோபித்துக்கொள்ளாமலிருப்பது அக்ரோதமாகும். கோபம் ஏற்படாமலிருப்பது க்ஷமையாகும். கோபம் வந்தும் கூட அதை அடக்கிக்கொண்டு கோபித்துக் கொள்ளாமலிருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். கோபத்திற்குக் காரணமாயிருந்தவன் நம்மைவிட பலிஷ்டனாயிருந்தால் நம் கோபம் அவனை ஒன்றும் செய்யமுடியாததினால் கோபித்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை என்பதுடன் மேலும் அவனுடைய விரோதத்தை ஸம்பாதித்துக் கொள்வதாகவே ஆகுமானதினால், கோபம் எவ்வளவு வந்தாலும் அடக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அவன் பலிஷ்டனாயில்லையானாலும், பின்னால் அவனால் நமக்கு ஏதேனும் பிரயோஜனம் ஆக வேண்டியிருந்தால் இப்பொழுது அவனை விரோதியாகச் செய்வது நியாயமில்லாததினால் சிலவேளைகளில் கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதுமாதிரி பலவித காரணங்களினால், வரும் கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டிய ஸந்தர்ப்பங்கள் பலவுண்டு. இவைகளில் எல்லாம் கோபம் வந்த பிறகே அடக்கப்படுகின்றபடியால், கோபத்தினால் மனதில் ஏற்படும் கலக்கம் இருந்தே தீரும். கோபம்



அடக்கப்பட்டதே தவிர, இல்லாமல் செய்துவிடவில்லை. ஆகையால், வரும் கோபத்தை அடக்கிக் கொள்வதும் ஒருவாறு குணமாயிருந்தாலும் உத்தம குணமாகாது.

தவிரவும், நியாயமாக கோபம் ஏற்பட்டு அதை வெளிக்காட்டி நிறைவேற்றிக்கொள்ள சக்தியும் ஸந்தர்ப்பமும் இருக்கும் போது கோபத்தை அடக்கிக்கொள்வதும் குணமாகாது. கோபம் ஏற்படுவது எவ்வளவு நியாயமாயிருந்தாலும் அதன் வசப்பட்டு தன் நிலையை இழந்துவிடுவதும் தோஷமேயாகும். ஏற்படும் கோபத்தை வெளிக்காட்டுவதிலும் காட்டாமலிருப்பதிலும் நமக்குள்ள ஸ்வாதந்திரியத்தை இழந்துவிடக்கூடாது. ஸ்ரீராமருக்கு விசேஷணங்கள் கொடுக்கும்போது, ஜிதக்ரோத: (கோபத்தை ஜயித்தவர்) என்றும், கோபம் வந்தால் பிரளயகாலத்து அக்னிக்கு ஸமானமானவர் என்றும், அவர் கோபம் எப்பொழுதும் வீண் போகாது என்றும், அவர் வேண்டியபோது கோபத்தை எடுத்துக் கொள்வார் என்றும் பலவாறாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வித வர்ணனைகளுடன் அவரை பொறுமையில் பூமிக்கு ஸமமானவர் என்றும் சொல்லியிருக்கிறது. அப்பொறுமை என்பது கோபத்தைக் காட்டிகொள்ள ஸாமர்த்தியமிருந்தும் காட்டிக் கொள்ளாமலிருப்பது என்பதில்லை. தன்னுடைய உத்தமமான பெருந்தன்மையினால் கோபம் ஏற்படாமலிருந்தால்தான் வாஸ்தவமாக பொறுமையாகும். "எனக்குக் கோபம் வந்தது. ஆனால் இந்த தரித்திரப் பயலிடம் காட்டவாவது என்று பொறுத்துக்கொண்டிருந்தேன்" என்றால் இது பொறுமையே ஆகாது. ஏனென்றால் மனதில் கலக்கமிருக்கும்; பின்னால் அவனைப் பார்க்கிற போதெல்லாம் "இவன் நமக்கு கெடுதல் செய்தவன்" என்ற ஞாபகம் இருந்து கொண்டேயிருக்கும். இவ்விதமிருந்தால் இது தோஷமற்றதாக ஆகாது. ஸ்ரீராமரைப் பற்றி சொல்லும்போது "நூறு அபசாரம் செய்திருந்தாலும் தன்னுடைய பெருந்தன்மையினால் ஞாபகத்திலேயே வைத்துக் கொள்வது கிடையாது" எனப்படுகிறது. இதுவே பொறுமையாகும்.

கோபமோ, துக்கமோ ஏற்படும்போது ஸாமான்ய ஜனங்கள் அதற்குப் பரவசமாக ஆகிவிடுகிறார்கள். கொஞ்சம் விவேகமுள்ளவன் அந்த ஸமயத்தில் தன்னை மறந்தாலும் பின்னால் அவ்விதம் பரவசமானது பிசகு என்பதை உணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ள பிரயத்தினம் செய்வான். இந்த இரண்டு அம்சங்களையும் காட்டக்கூடியதாக மஹாபாரதத்தில் ஒரு சிறு கதை இருக்கிறது. பரத்வாஜர், ரைப்யர் என்று இரண்டு ரிஷிகள் பக்கத்துப் பக்கத்து ஆசிரமங்களில் இருந்து கொண்டு வெகு அன்யோன்யமாக இருந்து வந்தார்கள். அவர்களில் ரைப்யரும் அவருடைய குமாரர்கள் அர்வாவஸு, பராவஸு என்ற இருவர்களும் நல்ல வித்வான்களாக இருந்து எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தார்கள். பரத்வாஜரும் அவருடைய குமாரன் யவக்ரீதனும் தபஸ்ஸில் நோக்கமுள்ளவர்களே தவிர வித்வான்களில்லை. மற்றவர்கள் தங்களை விசேஷமாக மதிக்காததினால் யவக்ரீதன் எப்படியாவது ஸகல வேதங்களுடைய அறிவையும் ஸம்பாதித்துகொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டான்.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஸ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

रत्नावलीनिर्मितशैलशृङ्गविभ्राजदापूर्णसुधाकराभम् ।
आकण्ठरक्ताम्बरसंवृताङ्ग्या मुखाम्बुजं भाति जगज्जनन्याः ॥
ரத்னாவலீநிர்மிதஶைலஶ்ரு'ங்க³விப்⁴ராஜதா³பூர்ணஸுதா⁴கராப⁴ம் |
ஆகண்ட²ரக்தாம்ப³ரஸம்'வ்ரு'தாங்க்³யா முகா²ம்பு³ஜம்' பா⁴தி ஜக³ஜ்ஜனன்யா: ||

கழுத்துவரை செந்நிற ஆடை அணிந்த உலகின் தாயின் முகம் ரத்தின வரிசைகளால் அமைத்த மலையின் சிகரத்தில் விளங்குகிற பூர்ண சந்திரனையொத்திருக்கிறது. (1)

आकण्ठमानम्रजनानुरागो ममेति लोकस्य विबोधनाय ।
आकण्ठरक्ताम्बरसंवृताङ्गी पद्मोत्थजाया प्रविभाति नूनम् ॥
ஆகண்ட²மானம்ரஜனானுராகோ³ மமேதி லோகஸ்ய விபோ³த⁴னாய |
ஆகண்ட²ரக்தாம்ப³ரஸம்'வ்ரு'தாங்கீ³ பத்³மோத்த²ஜாயா ப்ரவிபா⁴தி நூனம் ||

பிரும்மாவின் மனைவி தன்னை வணங்குகிற மக்களிடம் கொண்டுள்ள அன்பு கழுத்துவரை உள்ளதென உலகிற்குக் காட்ட கழுத்துவரை செந்நிற ஆடையால் உடலைப் போர்த்தியுள்ளாள் என நிச்சயமாகத் தோன்றுகிறது. (2)

एवं सर्वजगन्त्यप्युत्सङ्गे सन्निधाय रक्षामि ।
इति बोधनाय जगतामङ्के बालं दधासि मातस्त्वम् ॥
ஏவம்' ஸர்வஜக³ந்த்யப்யுத்ஸங்கே³ ஸந்நிதா⁴ய ரக்ஷாமி |
இதி போ³த⁴னாய ஜக³தாமங்கே பா³லம்' த³தா⁴ஸி மாதஸ்த்வம் ||

தாயே! இவ்வாறே உலகமனைத்தையும் மடியில் இட்டுக் காப்பாற்றுகிறேன் உலகிற்குக் காட்ட மடியில் என குழந்தையைத் தாங்கியுள்ளாயோ? (3)

शिशुमिव पदनतलोकं परिरक्षामीति बोधनायैव ।
अङ्के निधाय बालं भातीयं पङ्कजातभवदयिता ।।
ஶிஶுமிவ பத³னதலோகம்' பரிரக்ஷாமீதி போ³த⁴னாயைவ |
அங்கே நிதா⁴ய பா³லம்' பா⁴தீயம்' பங்கஜாதப⁴வத³யிதா ||

தன் சரணங்களில் வணங்கியவனையும், சிசுவைப் போல் காப்பாற்றுகிறேன் எனத் தெரிவிப்பதற்காகவே பிரும்மனின் இனியாள் மடியில் பாலனை வைத்துக் கொண்டுள்ளாள்.(4)
(தொடரும்....)



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)

### அத்தியாயம் : மூன்று

மாக மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதன் பலன்; மன்னன் சுமதி-சத்தியவதியின் முற்பிறவி வரலாறு

மன்னர் சுமதி மேலும் கூறுகிறார் : புகழ்பெற்ற முனிவரே! அந்த ஆசிரமத்தின் அருகில் ஒரு தடாகம் இருந்தது. அதில் அன்னம், நீர்க்காக்கை முதலிய பறவைகள் ஏராளமாக வசித்து வந்தன. அந்த நீர்நிலையின் நாற்புறமும் காட்டு மலர்களின் கொத்துக்களால் மறைக்கப்பட்டிருந்தன. அந்த நீர்நிலையின் தண்ணீரைப் பருகி தாகத்தைத் தணித்துக் கொண்டேன்; அதன் கரையில் உட்கார்ந்து உடல் சிரமத்தைப் போக்கிக் கொண்டேன்; பின், சில மரங்களைப் பெயர்த்தெடுத்து, அவற்றின் வேர்களை உண்டு பசியைத் தணித்துக் கொண்டேன். வசிஷ்டரின் ஆசிரமத்தருகிலேயே நான் வசிக்கத் தொடங்கினேன். அங்கு சிதறிக் கிடந்த ஸ்படிகத் துண்டுகளைக் கொண்டு என் வீட்டின் சுவர்கள் கட்டினேன்.



இலை-புல்-மரக்கட்டைகள் சேகரித்து மேலே மூடி ஒரு நல்ல வீட்டைக் கட்டிக் கொண்டேன். வேடர்களின் வாழ்க்கையை ஏற்று, பல்வகை விலங்குகளையும் கொன்று அதன்மூலம் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருபதாண்டுக்காலம் விசிஷ்டரின் ஆஸ்ரமம் அருகிலேயே தங்கியிருந்தேன். இவள் அப்போது, விந்திய நாட்டில் வேடர் குலத்தில் தோன்றிய, காளி என்று பெயர் பெற்ற நற்குணம் படைத்த இந்த என் மனைவி என்னிடம் வந்து சேர்ந்தாள்.

பிரும்மன் உற்றார்-உறவினர்களால் கைவிடப்பட்டு, அதனால் மிகவும் துக்கமடைந்து, உடல் நலிந்து பசி-தாகங்களால் மிகவும் களைப்படைந்து யார் எனக்கு உணவு அளித்து உயிர் கொடுப்பார்கள் ? என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். அங்குமிங்கும் அலைந்து திரிந்துகொண்டிருந்த இவள், மனித நடமாட்டமில்லாத நான் வசித்துக் கொண்டிருந்த அந்த காட்டிற்குத் தெய்வச்செயலாக வந்து சேர்ந்தாள்.

நல்ல கடுமையான கோடை காலம். வெளியே வெயில் வாட்டி எடுத்தது; மனத்தினுள்ளே துயரம் வாட்டி எடுத்தது. இவ்வாறு மிகவும் துன்பத்தில்



தவித்துக் கொண்டிருந்த எனக்கு இந்தப் பெண்ணைக் கண்டு எனக்கு இரக்கம் ஏற்பட்டது. பிரும்மத்தை அறிந்த மகாஞானியே! நான், புலாலும், காட்டுப் பழங்களும் இவளுக்குக் கொடுத்தேன். அதன்பின், களைப்பு நீங்கிய அவளிடம், அவள் பற்றிய முழு விபரங்களையும் கேட்டேன்.

மாமுனிவரே! அவள் தன் பிறப்பு-வளர்ப்பு பற்றிக் கூறியவைகளைக் கேளுங்கள். இவள் பெயர் காளி, வேடர் குலத்தில் தோன்றியவள். பேரறிவாளரே! தாம்பிகன் என்பவனுடைய மகளாகிய இவள் விந்தியமலையில் வசித்துக் கொண்டிருந்தாள். எப்போதும் பிறர் சொத்துக்களை அபகரித்து வந்தாள். கோள் சொல்வதே இவள் வேலை. ஒரு நாள் தன் கணவனையே கொன்று விட்டாள். அதனால் உறவினர்களால் துரத்திவிடப்பட்டாள். சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் போது, மக்களே இல்லாத இந்தக் காட்டில் என்னிடம் வந்து சேர்ந்தாள். இவ்வாறு, தான் செய்த காரியம் எல்லாவற்றையும் என்னிடம் மறைக்காமல் முழுவதையும் தெரிவித்தாள்.

முனிவரே! வசிஷ்டருடைய ஆசிரமத்திற்கு அருகில், நானும் இவளும் கணவன்-மனைவி என்ற உறவு கொண்டு, புலால் உணவை உண்டு வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருந்தோம். ஒரு நாள் வழக்கம் போல் உணவுக்காக விலங்குகளை வேட்டையாடுவதற்காக வசிஷ்டருடைய ஆஸ்ரமம் அருகில் சென்றோம். சான்றோரே! தேவரிஷிகளின் கூட்டத்தை அங்கே பார்த்ததும் ஆச்சர்யம் மேலிட அருகில் சென்றோம். அப்போது நடந்து கொண்டிருந்த (மாசி) மாதத்தில் நாள்தோறும், அந்தணர்கள் இராமாயணம் படிப்பதைக் கண்டோம். மகாபலம் படைத்தவர்களாக இருந்தாலும், அப்போது உணவு உண்ணாததால் பசியும் தாகமும் வாட்டியெடுத்தன. எனவே, எங்கள் விருப்பம் இல்லாமலே. வசிஷ்டருடைய ஆசிரமத்தை நோக்கிச் சென்றோம்.

இராமாயணத்தைக் கேட்பதற்காக, பக்தியுடன் ஒன்பது நாட்கள் தொடர்ந்து அவ்விடம் சென்றோம். அது முடிந்தவுடனேயே எங்களுக்கு மரணம் ஏற்பட்டுவிட்டது. ஒன்பது நாட்கள் இராமாயணம் கேட்ட அந்தப் புண்ணியச் செயலால், பகவான் மதுசூதனன் மனம் களித்து, எங்களை அழைத்துக் கொண்டு போவதற்காக, தன்னுடைய தூதர்களை அனுப்பி வைத்தார்.

(தொடரும் .....)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ  ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்